H www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முழு ஆண்டுப் பொதுத் தேர்வு - 2023

## எட்டாம் வகுப்பு

பதிவு எண்:

நேரம்: 2.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 15×1=15

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ..............
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ....... காரணமாக அமைந்தது.
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை

3. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் .............
அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு

4. ஓடை + ஆட - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
அ) ஓடை ஆட ஆ) ஓடையாட இ) ஓடையோட ஈ) ஓடைவாட

5. மாடு வயலில் புல்லை மேய்ந்தது - இத்தொடரிலுள்ள வினைமுற்று ....................
அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) மேய்ந்தது

6. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ............ நீட்சியாகவே உள்ளது.
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்

7. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ............
அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

8. உடனிகழ்ச்சிப் பொருளில் ........... வேற்றுமை வரும்.
அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்

9. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) கச + டற ஆ) கசட + அற இ) கசடு + உற ஈ) கசடு + அற

10. சேரர்களின் தலைநகரம் ..............
அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி

11. விகாரப் புணர்ச்சி ........... வகைப்படும்.
அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

*பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி:*

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்ம்மினே

12. இப்பாடலை எழுதியவர் யார்?
அ) இராமலிங்கர் ஆ) கம்பர் இ) இளங்கோவடிகள் ஈ) திருமூலர்

13. 'நமனில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............
அ) நம் + இல்லை ஆ) நமது + இல்லை இ) நமன் + நில்லை ஈ) நமன் + இல்லை

14. 'நமன்' என்ற சொல்லின் பொருள் ..............
அ) இறைவன் ஆ) எமன் இ) புலவன் ஈ) சித்தர்

15. இப்பாடல் இடம் பெற்ற நூல் .............
அ) திருப்பாவை ஆ) திருவெம்பாவை இ) திருமந்திரம் ஈ) ஆத்திச்சூடி

### பகுதி - II

*பிரிவு - 1*

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி (21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளி)** 4×2=8

16. விடைக்கேற்ற வினா அமைக்க:
அ) தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை அயோத்தி தாசர்.
ஆ) 1930 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதலாவது வட்ட மேசை மாநாடு நடைபெற்றது.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
18. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
19. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?
20. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
21. "படும்" என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாவிற்கு குறுகிய விடையளி: 5×2=10

22. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக :
முத்து நன்கு படித்தான். முத்து வாழ்வில் உயர்ந்தான்.
23. சரியான மரபுச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
அ) சோறு ............ (தின் / உண்)
ஆ) பால் .............. (குடி / பருகு)
24. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
25. கலைச்சொற்கள் தருக : அ) University ஆ) Saint
26. உவமைத் தொடரைப் பயன்படுத்தி தொடர் அமைக்க: வேலியே பயிரை மேய்ந்தது போல
27. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக:
தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது
28. பொருத்துக :

| | | |
|---|---|---|
| அ) மட்பாண்டம் | - | தோன்றல் விகாரம் |
| ஆ) மரவேர் | - | இயல்புப் புணர்ச்சி |
| இ) மணிமுடி | - | கெடுதல் விகாரம் |
| ஈ) கடைத்தெரு | - | திரிதல் விகாரம் |

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமான விடையளி: 2×3=6

29. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக?
30. நோய்கள் பெருகக் காரணம் என்ன?
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:

அம்பேத்கர் பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார். 1915 இல் "பண்டைக்கால இந்திய வணிகம்" என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார்.

அ) அம்பேத்கர் உயர்கல்வி கற்க எங்கு சென்றார்?
ஆ) அம்பேத்கருக்கு உயர்கல்வி கற்க யார் உதவி புரிந்தார்?
இ) எந்த ஆய்விற்காக அம்பேத்கர் முதுகலைப் பட்டம் பெற்றார்?

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 34 கட்டாய வினா. 2×3=6

32. நீதிநெறி விளக்கப் பாடல் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
33. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
34. அடிபிறழாமல் எழுதுக:
"கற்றோர்க்குக் கல்வி" எனத் தொடங்கும் குமரகுருபரர் பாடல் (அல்லது)
"உடலின் உறுதி" - ஆயுள் பெறுவாயே" என்ற வருமுன் காப்போம் பாடலை எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2×3=6

35. அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?
36. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம் தீமை யால் திரிந்து அற்று - இக்குறளில் அமைந்துள்ள அணியை விளக்குக.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

37. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 5×5=25

38. விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனை பாராட்டிக் கடிதம் எழுதுக.

(அல்லது)

இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

39. கல்வி குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

விழாக்களின் போது இசைக்கருவிகளை இசைக்கும் வழக்கம் எவ்வாறு தோன்றியிருக்கும் என எழுதுக.

40. *கதை நிகழ்வுக்கேற்பச் சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துக:*

1. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவைக்குத் தெரிவித்தல்
3. ஔவைக்குத் தொண்டைமான் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்
4. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்
5. தொண்டைமான் போர் வேண்டாம் என்று முடிவு செய்தல்
6. தொண்டைமானிடம் ஔவை அதியமானின் படைச்சிறப்பைக் குறிப்பால் உணர்த்துதல்

41. *விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடைதருக:*

தூத்துக்குடி புத்தக சங்கமம்

உலகப் புத்தக நாளை முன்னிட்டு

**மாபெரும் புத்தகக் காட்சி**

*ஏப்ரல் 13 முதல் 23 முடிய*

*பகல் 2 மணி - இரவு 9 மணி*

*14, 15, 16 ஆகிய தேதிகளில் காலை 11 மணி*

*தூத்துக்குடி தருவை மைதானம்.*

10% கழிவு

**அனுமதி இலவசம்!** **அனைவரும் வருக! பலன் பெறுக!**

1. எந்த நாளை முன்னிட்டு புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?
4. புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக்கட்டணம் எவ்வளவு?
5. புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

42. உழவுத்தொழில் சிறக்க இன்றியமையாதனவாக நீங்கள் கருதுவன யாவை? (அல்லது)

ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்ய வேண்டிய நற்செயல்கள் யாவை?

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி:** 3×8=24

43. வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

கைவினைக் கலைகளுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இடையேயுள்ள தொடர்பு குறித்து எழுதுக.

44. மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றி தொகுத்து எழுதுக. (அல்லது)

காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - (முன்னுரை - நோய் வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை) (அல்லது)

உழைப்பே உயர்வு

----------